4th July 1962]

முடியாமல் இருக்கிருர்கள். அதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா? இந்த ஆண்டு அவர்களுக்கு ஏதாவது வழி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் நிதி நிலைமைக்கு தக்கவாறு எவ்வாறு உதவி செய்ய முடியுமோ அவ்வாறு மாணவர்களுக்கு உதவி செய்துகொண்டுவருகிறது. சோசலிஸ சமுதாய பாணி அமைப்பில் ஏதாவது வசதி உடையவர்கள் வருமானம் வரும்போது கொஞ்சம் கொடுக்கத்தான் வேண்டும்.

விவசாய உற்பத்தி கருத்தரங்கு

*114 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ல் உதகையில் நடந்த தென் பிராந்திய விவசாய உற்பத்தி கருத்தரங்கில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Since the seminar was convened by the Government of India, the proceedings and conclusions reached are awaited from them.

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையில் நடந்த தென் பிராந்திய விவசாய உற்பத்தி கருத்தரங்கில் நம்முடைய மாகாணத்தில் என்னென்ன வகையிலே உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்பதைப்பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிருர்களா? அதன் காரணத்தை ஒட்டி அண்மை மாகாணத்திலிருந்து நம் மாகாணத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதன் கருத்தைப்பற்றி விளக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது விவசாய உற்பத்தி பெருக்கத்தைப்பற்றிய கருத்தரங்கு. இதில் நீர்ப்பாசன விஷயங்கள் வந்திருக்க முடியாது. நம்முடைய அரசாங்கப் பிரதிநிதிகளும் இந்த கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள். இந்த கருத்தரங்கின் நடவடிக்கை விவரங்கள் இன்னும் இந்த அரசாங்கத்திற்கு வரவில்லை.

Municipal Council, Madurai

*115 Q.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether the Government have received any representation from the Madurai Municipal Council to increase the number of seats in the Council on population basis; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI S. M. A. MAJID : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

திரு. கே. மூக்கையா தேவர் : அது எப்பொழுது அதிகப்படுத்தப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது சொல்வதற்கில்லை.